2022 ஏப்ரல் 20]

138—

செவிலியர் படிப்பு

***5581—திரு. பெரி. செந்தில்நாதன்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கை மருத்துவக் கல்லூரியில் பி.எஸ்சி. செவிலியர் படிப்பினை துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சிவகங்கை மாவட்டத்தின் அருகிலுள்ள மதுரையில் 50 இடங்களுடன் செவிலியர் கல்லூரியும், 100 இடங்களுடன் செவிலியர் பயிற்சிப் பள்ளியும், இராமநாதபுரத்தில் 100 இடங்களுடன் செவிலியர் பயிற்சிப் பள்ளியும், தேனி மாவட்டம், பெரியகுளத்தில் 50 இடங்களுடன் செவிலியர் கல்லூரியும் மற்றும் தேனியில் 100 இடங்களுடன் செவிலியர் பயிற்சிப் பள்ளியும் இயங்கி வருகின்றன. எனவே, சிவகங்கை மாவட்டத்தில் இருக்கின்ற மாணவர்கள் அருகாமையில் இருக்கின்ற மாவட்டங்களுக்குச் சென்று கல்வி பயில்வதற்கு ஏதுவாக, இந்தக் கல்லூரிகள் அமைந்திருக்கிற சூழலில், புதிய செவிலியர் கல்லூரி என்பது சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரியில் தற்போது எழவேண்டிய அவசியம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன் அவர்கள்.*

திரு. பெரி. செந்தில்நாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டு, 10 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. நான் கிராமத்திலே பிறந்தவன். கிராமத்திலே ஒரு பழமொழி உண்டு. 'மனமிருந்தால் மார்க்கம் உண்டு' என்று. இந்தப் பொருளாதார நெருக்கடியிலே, இந்த அரசியல் நெருக்கடியிலே தமிழக மருத்துவ வரலாற்றிலேயே ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகளை (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களும், அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. சாதனைகள் நிறைய அவையில் பதிவாகிவிட்டன. கேள்வியைக் கேளுங்கள்.

திரு. பெரி. செந்தில்நாதன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டப் பகுதிக்கு இரண்டு மாதத்திற்கு ஒருமுறை சுற்றுப்பயணம் வந்து, எங்களையெல்லாம்கூட அழைத்து, வேண்டியதைச் செய்து கொடுப்பவர்தான். பின்தங்கிய மாவட்டமான சிவகங்கை மாவட்டத்திலே ஒரு செவிலியர் கல்லூரியை அமைக்க வேண்டும். ஏற்கெனவே அனைத்து infrastructure-ம் இருக்கிறது. மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இருக்கிறது. ஒரு நாளைக்கு 1,200 முதல் 1,500 வரை patients வருகிறார்கள். மதுரை செவிலியர் கல்லூரி, சிவகங்கையிலிருந்து 50 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. சிவகங்கை மாவட்டத்தின் கடைகோடியிலிருந்து பார்க்கும்போது, மேலும் 70 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஆக, 120 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தனிப்பட்ட முறையிலேகூட, எங்கள் பகுதியிலிருந்து பிழைப்பிற்காக சென்னை, சைதாப்பேட்டை பகுதிக்கு வந்திருப்பவர்களையெல்லாம் ஆதரிக்கக்கூடியவர். சிவகங்கை மாவட்டத்திற்கும் செவிலியர் கல்லூரியை தர வேண்டுமென்று வலியுறுத்தி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11 மருத்துவக் கல்லூரிகளின் வரலாற்றைத் தொடர்ந்து பல முறை சொல்லியாகிவிட்டது. சொல்லி, சொல்லி எனக்கும் புளித்தே போய்விட்டது. எனவே, மீண்டும் மீண்டும் அதையே சொல்கின்ற தேவை இருக்காது என்று கருதுகின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய சிவகங்கை மாவட்டத்திலுள்ள மருத்துவக் கல்லூரி, 2009 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21-ம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது என்பதை அவரும் அறிவார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கல்லூரியில் 13 துறைகள் இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கின்றன. 50 ஏக்கர் நிலப்பரப்பில் 500 படுக்கைகளுடனான அந்தக் கல்லூரிக்கு,

2022 ஏப்ரல் 20]

கடந்த வாரம்கூட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நவீன வசதியுடன்கூடிய 28 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவை திறந்து வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி பல வசதிகள் தொடர்ந்து செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை ஏற்று, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, தமிழகத்தில் எங்கெல்லாம், செவிலியர் பயிற்சிப் பள்ளிகள், செவிலியர் கல்லூரிகள் இல்லையோ, அந்த மாவட்டங்களில் எதிர்காலத்தில் படிப்படியாக அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன் அவர்கள், நன்றி சொல்லிவிடுங்கள்.*

முற்பகல் 11–10

திரு. பெரி. செந்தில்நாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மருத்துவக் கல்லூரியில் ஒரு நாளைக்கு 50 முதல் 100 நபர்கள் வந்து* C.T. Scan *எடுக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், தருவதாகச் சொல்லிவிட்டார்கள்.*

திரு. பெரி. செந்தில்நாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றையும் சேர்த்து சொல்லிவிடுகிறேன். 50 முதல் 100 நபர்களுக்கு* C.T. Scan *எடுக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஒரே ஒரு* machine *இருப்பதனால், அதில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுகின்றன. எனவே, கூடுதலாக ஒரு* CT scan machine *வழங்க வேண்டும். முதல் தவணை* dialysis *செய்வதற்கு* Catheter *போட வேண்டியிருக்கிறது. மதுரைக்குச் சென்றுதான்* Catheter *போட வேண்டியிருக்கிறது. அதைப் போட்டுகொண்டு வந்துதான், இரண்டாவது தவணை* dialysis*–ஐ சிவகங்கை மருத்துவமனையில் செய்ய வேண்டியிருக்கிறது. சிவகங்கை மருத்துவமனையிலேயே முதலில்* Dialysis*–ஐ செய்வதற்கு ஏற்றவகையில், அதற்கான மருத்துவரை அந்த மருத்துவக் கல்லூரியில் நியமிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.*

15-க்கும் மேற்பட்ட மருத்துவர்கள், 30 செவிலியர்கள் எல்லோருமே மதுரைக்கு deputation-ல் போய்விடுகிறார்கள். ஏற்கெனவே அவர்கள் மதுரையில் இருக்கிறார்கள். அவர்களை சிவகங்கையில் posting-ல் போடும்போது அவர்கள் deputation-ல் மதுரைக்குச் சென்று விடுகிறார்கள். அதனால், இங்கே பாதிப்புகள் ஏற்படுவதோடு, அங்கே மதுரையில் தேவைக்கு அதிகமானோர், deputation-ல் செல்வதால், அங்கு கூடுதலாக இருக்கிறார்கள். சிவகங்கை சிறிய town ஆக இருப்பதால், அவர்கள் இங்கே இருக்காமல் மதுரைக்கு deputation-ல் சென்று விடுகிறார்கள். எனவே, அவர்கள் மதுரைக்கு deputation-ல் போவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

Pharmacy courses ஆன D. Pharm, B. Pharm, Radiology, Cardiac Technician, Dialysis Technician, ECG Technician போன்ற படிப்புகளும், Master degree-ல் Physiology, Community medicine, Pathology, Forensic Science, Bio-Chemistry போன்ற மருத்துவ மேற்படிப்புகளையும் தருவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு சபாநாயகர் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனையில் ஏற்கெனவே MRI scan, CT scan, Digital X-ray, Ultrasound-Guided Mechanical Ventilator, Mammogram, Dialysis machine, RT-PCR என பல்வேறு அதிநவீன வசதிகளுடன்கூடிய கருவிகள் இயக்கத்தில் இருக்கின்றன. என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற கூடுதல் கருவிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் 2009-ல் சென்னை சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை

2022 ஏப்ரல் 20]

சித்த மருத்துவக் கல்லூரிகளில் இந்திய முறை மருத்துவம், Diploma in Nursing Therapy *பயின்ற 500-க்கும் மேற்பட்ட செவிலியர்கள் இருக்கிறார்கள். கொரோனா காலத்தில் அனைத்து மருத்துவமனைகளிலும், சித்தா, ஆயுர்வேதம், யுனானி, இயற்கை மருத்துவம், ஹோமியோபதி போன்ற மருத்துவத்தின்மூலம் தீவிர சிகிச்சை அளித்த செவிலியர்களை, நம்முடைய அரசு பணி நியமனம் செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

அதேபோன்று தமிழ்நாடு முழுவதும் இருக்கிற அரசு மருத்துவமனைகள், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்றவற்றில் காலியாகவுள்ள Technicians *மற்றும் செவிலியர்கள் உள்ளிட்ட பதவிகளை நிரப்புவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று சிறப்பு நடவடிக்கையாக இதனை மேற்கொள்வாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

குறிப்பாக 2009 ஆம் ஆண்டில் கலைஞர் அவர்களது ஆட்சியில் இந்த Course *அறிமுகப்படுத்தப்பட்டது. கடந்த காலங்களில் அவர்களில் ஒருவருக்கு கூட தமிழ்நாட்டில் இதுவரைக்கும் பணி வழங்கப்படவில்லை. கலைஞர் ஆட்சியில் படிப்பதற்கு வாய்ப்பைத் தந்ததால் படித்த அந்தச் செவிலியர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, பணிகள் வழங்க மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய மருத்துவத்திற்கு வணக்கத்துக்குரிய தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எந்த அளவிற்கு முக்கியத்துவத்தை அளித்துக் கொண்டிருக்கிறார் என்பதை அனைவரும் நன்றாக அறிவோம். சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் என்ற ஒன்றை தமிழகத்தில் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவரும் அறிவார். எனவே, மிக விரைவில் சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் போன்றவற்றில் அதிநவீன வசதிகள் தமிழகத்திற்கு வருகிறபோது, அவர் சொன்ன,*

அந்தக் காலிப் பணியிடங்கள் அவர்கள் படித்த அந்தப் படிப்புக்கு ஏற்ற வகையில், அனைத்துமே, தமிழகத்தில் காலிப் பணியிடங்களாகக் கருதப்பட்டு, நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன் அவர்கள்.

திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூரில் தேரோடும் வீதிகளில் மின் புதைவடங்கள் அமைக்கப்படும் என அறிவித்த மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சரின் மாவட்டமான திருவாரூர் மாவட்டத்தில், எம் மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் 2010-2011 ஆம் ஆண்டில், செவிலியர் கல்லூரி அமைக்க உரிய அரசாணை வெளியிடப்பட்டது. ஆனால், கடந்த 10 ஆண்டுகளில் அது துவங்கப்படவில்லை. எனவே, இந்த ஆண்டில், அந்த செவிலியர் கல்லூரியைத் துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புவதுடன், அதற்குரிய இடமும் அந்தப் பகுதியில் உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏற்கெனவே 5 இடங்களில் செவிலியர் கல்லூரிகளும், 21 இடங்களில் செவிலியர் பயிற்சிப் பள்ளிகளும் இருக்கின்றன. ஏற்கெனவே நான் சொன்னதைப்போல எந்தெந்த மாவட்டங்களில் செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் இல்லையோ அங்கெல்லாம் அமைப்பதற்கு படிப்படியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அப்படி மேற்கொள்ளப்படும்போது திருவாரூருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள்.

2022 ஏப்ரல் 20]

முற்பகல் 11–15

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு மாவட்ட மருத்துவமனை சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. புதிதாகக் கட்டப்பட்ட நான்கு மாடிகளில் ஒரு மாடியில்* O.P. Block*–ம், மூன்று மாடிகளில்* Maternal and Child Care *பிரிவும் தொடங்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு இரண்டு முறை வந்து அந்த மருத்துவமனையைப் பார்த்திருக்கிறார்கள். தினசரி 1,500–க்கும் மேற்பட்ட வெளி நோயாளிகள் வந்து கொண்டிருக்கிறார்கள்; 300–க்கும் மேற்பட்ட படுக்கை வசதிகள் இருக்கின்றன. இத்தனையும் இருக்கின்ற பொள்ளாச்சி மாவட்டத் தலைமை மருத்துவமனையில் ஒரு நர்சிங் கல்லூரியை நல்ல முறையிலே அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதுபோல, 38 மாவட்டங்களிலும் செவிலியர் கல்லூரிகள் அமைவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மேற்கொள்ள உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தவகையில், கோவை மாவட்டத்தில், பொள்ளாச்சியிலும் செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள்.*

திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதிக்குட்பட்ட தோகைமலையில் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகின்றது. தோகைமலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஒன்பது ஊராட்சிகளில் சுமார் 60,000–க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். பெருகி வருகின்ற மக்கள்தொகைக்கேற்ப போதுமான மருத்துவ வசதிகள் அந்த மருத்துவமனையில் இல்லை. ஆகவே, அந்த*

மருத்துவமனையை அரசு பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனைத் தரம் உயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே நான் பலமுறை சொன்னதைப்போல கடைசி மனிதனுக்கும் சுகாதாரம், மருத்துவ வசதி என்பது உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றாக இருந்து கொண்டிருக்கின்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மருத்துவத் துறையின் கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக தினந்தோறும் ஆய்வுகளை மேற்கொண்டு, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். மருத்துவமனைகளை தரம் உயர்த்துவது என்பதைக்காட்டிலும் அந்தப் பகுதி மக்களுக்கு சரியான மருத்துவம் போய்ச் சேர்கிறதா என்பதைக் கண்காணிப்பது மிக அவசியம். அந்தவகையில் அவர் சார்ந்திருக்கின்ற பகுதிக்கு என்னென்ன வசதிகள் வேண்டுமோ அதை எதிர்காலத்தில் செய்து தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூரிலிருந்து சேலம் செவிலியர் கல்லூரிக்கு 65 கி.மீ. தூரம் சென்று படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. கலைஞர் ஆட்சியில்தான் மேட்டூரில் தலைமை மருத்துவமனையும், அரசுக் கல்லூரியும் அமைக்கப்பட்டது. மேட்டூர் மிகப் பெரிய தொகுதி. நமது தளபதியார் ஆட்சியில், அந்தத் தொகுதியில் செவிலியர் கல்லூரியை அமைக்க வேண்டும் என்பது மேட்டூர் பகுதி மக்களின் எதிர்பார்ப்பு. அந்தக் கல்லூரியை அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் ஏற்கெனவே செவிலியர் கல்லூரியும் இருக்கின்றது, செவிலியர் பயிற்சிப் பள்ளியும் இருக்கின்றது. மாவட்டத்திற்கு ஒன்று என்பது இந்த அரசின் இலக்கு. உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல தொகுதிக்கு ஒன்று என்பது சாத்தியம் இல்லாத ஒன்று. இருந்தாலும் இதுகுறித்து எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 139, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள். மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

139—

நவீன விளையாட்டு மையம்

***11980—திரு. அம்மன் K. அர்ச்சுணன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் (வடக்கு) தொகுதியில் நவீன விளையாட்டு மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்-காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் (வடக்கு) சட்டமன்றத் தொகுதியில் நவீன விளையாட்டு மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.